மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 485, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

485—

பழக் கூழ் தொழிற்சாலை

*__4802—திரு. கா.கோ. ரமேஷ்:__

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் குளிர்சாதனக் கிடங்கு வசதியுடன் பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதியில் குளிர்சாதனக் கிடங்கு அமைத்து பழக் கூழ் தொழில் நிறுவனம் தொடங்குவதற்குண்டான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் வருவார்களேயானால், அரசினுடைய மானியம் அவருக்குக் கிடைக்கும் எனத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றலின் அன்னையே, அகிலத்தின் விலாசமே, சரித்திரத் தாயே, சாதனைப் புகழே, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே, இந்தியத் திருநாட்டின் தனி மனித இராணுவமே, அன்னைத் தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த நாட்டு மக்களுக்கு நாளும் நல்ல திட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 14]

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியம், திருப்பத்தூர் ஒன்றியம், ஜோலார்பேட்டை ஒன்றியம், நாட்ராம்பள்ளி போன்ற நான்கு ஒன்றியங்களிலும் 'மா' அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. இங்கு மாம்பழம், சப்போட்டா, திராட்சை போன்ற பழ வகைகளை மிக அதிகமாக விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி முழுமையாக விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற தொகுதி. இத்தொகுதி விவசாய மக்களுடைய வாழ்வில் விளக்கு ஏற்றுகின்ற வகையில், நான்கு தனியார் தொழிற்சாலைகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், விவசாய மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையில், ஒரு குளிரூட்டும் வசதியுடன்கூடிய பழக் கூழ் தொழிற்சாலை அமைத்துத் தரப்படுமா என மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் சுமார் 13,500 எக்டேர் நிலப் பரப்பில் ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் அளவில் மாம்பழ விளைச்சல் அதிக அளவில் நடைபெறுகிறது. திருப்பத்தூர் பகுதியை அடுத்த கந்திலி பகுதியில் ஆறு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலைகள் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலமாக சுமார் 25,000 மெட்ரிக் டன் அளவு மாம்பழக் கூழ் தயாரித்து விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். மீதமுள்ள மாம்பழங்கள் அருகில் உள்ள கிருஷ்ணகிரி, சித்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. எந்தவொரு சிறு, குறு தொழிற்சாலையையும் அரசே நேரடியாகத் தொடங்குவதில்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—10

என்றாலுங்கூட, பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் தரப்பட்டிருக்கின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகிற திட்டங்களின்கீழ் பல்வேறு மானியங்களெல்லாம் கொடுக்கப்பட்டு வருகின்றன. எனவே,

அந்தத் திட்டங்களின்கீழ் பயன்பெறுவதற்கு தொழில் முனைவோர்கள் வருவார்களேயானால், அவர்களுக்கு இத்தகைய தொழிலை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது எனத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியில் மாம்பழம் மட்டுமின்றி சப்போட்டாவை மிகப் பெரிய அளவில் விவசாயிகள் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். கடந்த 3, 4 ஆண்டுகளாக சப்போட்டாவிற்கு சரியான விலை கிடைக்காத காரணத்தினால், கடந்த ஆண்டு மிகப் பெரிய அளவில் விவசாயம் செய்து கொண்டிருந்த நிலை மாறி, இன்று சப்போட்டாச் செடிகளையெல்லாம் வெட்டுகின்ற நிலை இருக்கின்றது. எனவே, சப்போட்டா கூழ் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை இங்கு நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால், அந்தப் பகுதி விவசாய மக்கள் எல்லாம் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். 100 சதவிகிதம் விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிற இந்த மலைப் பகுதியைச் சார்ந்த மக்களுக்கு, அந்தத் தொழிற்சாலையை மாண்புமிகு அம்மாவினுடைய நல்லரசு அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* நம்முடைய உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே பல்வேறு பழங்கள் எல்லாம் அதிக அளவில் விளைகின்றன, ஆகவே, அவற்றுக்கெல்லாம் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுமென்கிற ஒரு நல்ல எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். என்றாலுங்கூட, அரசு நேரடியாக எந்தத் தொழிலையும், தொழிற்சாலைகளையும் துவங்குவதற்கு இடமில்லை. எனவே, வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் பல்வேறு திட்டங்களின்கீழ் கடன் மற்றும் மானிய உதவிகளைப் பெற்று அந்தப் பகுதியிலே இருக்கிற தொழில் முனைவோர்கள், தொழில்களைச் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு

2013 மே 14]

உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதுகுறித்து ஆய்வு செய்து, அங்கே தேவை என்று சொன்னால், வேலூர் மாவட்டம் தொழில் மையத்தின்மூலமாக ஆவன செய்யப்படும் எனத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 486, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

486—

பொறியியல் கல்லூரி

***5712—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் அண்ணா தொழில்நுட்ப உறுப்புக் கல்லூரி ஒன்றும், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 13-ம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 6,405 இடங்களில் சென்ற கல்வியாண்டில் 2,661 இருக்கைகள் தவிர, மீதமுள்ள இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, வந்தவாசி தொகுதியில் ஒரு புதிய பொறியியல் கல்லூரி துவங்கும் கருத்துரு இந்த ஆண்டு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*